**திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(செப்டம்பர் 26-ம் தேதி முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (22.9.15- 24.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37- 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 26 |
| வானம் (ஆக்டா) | 2- 4 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 55-60 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 41- 53 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 4 |
| காற்றின் திசை | 0- 320 |

**30.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>26.9.15 | நாள் 2<br>27.9.15 | நாள் 3<br>28.9.15 | நாள் 4<br>29.9.15 | நாள் 5<br>30.9.15 |
| மழை (மி.மீ.) | 5 | 12 | 19 | 12 | 25 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 33 | 33 | 33 | 33 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 23 | 23 | 23 | 23 |
| வானம் (ஆக்டா) | 5 | 7 | 7 | 7 | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 58- 60 | 63- 65 | 73- 75 | 75- 78 | 76- 80 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 0/ வடக்கு | 0/ வடக்கு | 0/ வடக்கு | 0/ வடக்கு | 0/ வடக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், மிதமான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | நிலம் தயாரித்தல் | தாளடி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெல்லுக்கு நீர்த்தேவையை குறைக்க தொழி உழவு மற்றும் சமப்படுத்துதல் ஆகியவற்றை சிறப்பாக செய்தல் அவசியம். தொழி உழவு நன்றாக செய்வது கீழ்நோக்கி அடிமண்ணுக்கு செல்லும் நீர் இழப்பை குறைத்து நீர்த்தேவையை 20 சதம் வரை சேமிக்க உதவும். 2.5 செ.மீ. அளவு நீரை தேக்கி வைத்து தொழி உழவு |

| | | |
|---|---|---|
| | | செய்து பசுந்தாள் உரங்களை நன்கு மட்குவதற்காக எளிதில் மக்கும் பயிர்களான சணப்பு போன்ற பயிர்களுக்கு குறைந்தபட்சம் ஏழு நாட்கள் வரையும் கொழிஞ்சி போன்ற பயிர்களுக்கு பதினைந்து நாட்கள் வரையும் கால அவகாசம் கொடுக்கவும். |
| சோளம் | விதையளவு | மானாவாரியில் சோளத்தை முன்பருவ விதைப்பு செய்வதற்கு 22.5 கிலோ/எக்டர் என்ற அளவில் (பரிந்துரைக்கப்படும் விதையளவின் 1.5 மடங்கு) விதைகளை பயன்படுத்தவும். |
| | விதை கடினப்படுத்துதல் | மானாவாரியில் முன்பருவ விதைப்பு செய்யப்படும் சோளத்தின் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். விதைகளை 2 சத பொட்டாசியம் டைஹைட்ரஜன் பாஸ்பேட் கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும். |
| | பூச்சிக்கொல்லி விதை நேர்த்தி | மானாவாரியில் சோளத்தில் பூச்சி தாக்குதலை குறைக்க விதைகளை 15 கிராம் குளோர்பைரிபாஸ் + 150 மி.லி. பசையுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்கவும். |
| பருத்தி, சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் | பயிர் இடைவெளி | மானாவாரியில் நல்ல மகசூல் கிடைக்க பெறுவதற்கு பயிர்களை சரியான இடைவெளியில் விதைத்து போதிய பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். பயிர் இரகங்களுள் பருத்தி மற்றும் சோளம் ஆகிய பயிர்களுக்கு 45 x 15 செ.மீ., மக்காச்சோளத்திற்கு 45 x 20 செ.மீ., பயறுவகைகளுக்கு 30 x 10 செ.மீ., வீரிய ஒட்டு இரகங்களுக்கு இடைவெளியாக பருத்திக்கு 90 x 60 செ.மீ., சோளத்திற்கு 45 x 15 செ.மீ., மக்காச்சோளத்திற்கு 60 x 25 செ.மீ. என்ற அளவை பின்பற்றவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப்டம்பர் 26-30: 5, 12, 19, 12& 25 மி.மீ. பயிர்இடைவெளி (செ.மீ.)- இரகம்: சோளம்:45x15; வீரியஒட்டு இரகம்: பருத்தி: 90x60; சோளம்: 45x15; மக்காச்சோளம்: 60x25.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி